

பாடம் 4

ஏப்ரல் 20 - 26

# வாழ்வின் ஏற்ற இரக்கங்கள்

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *பிரசங்கி 4:9-12; பிலிப்பியர் 4:11-13; 1கொரிந்தியர் 7:25-34; மத்தேயு 19:8; ஆதியாகமம் 37:34; ஏசாயா 54:5.*

**மனன வசனம்:** பின்பு தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார். ஆதியாகமம் 2:18.

வேதனையான ஒரு சம்பவம் சில ஆண்டுகளுக்குமுன் நடந்தது. அடுக்குமாடிக் குடியிருப்பில் ஒரு பெண் தன் வீட்டில் இறந்து கிடந்தாள். அந்தப் பெண் இறந்து கிடப்பதை அவர்கள் கண்டுபிடித்ததற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பாகவே அவர் இறந்திருந்தாள். ஒரு பெரிய நகரத்தில், பல வசதிகள் உள்ள ஓரிடத்தில் ஒரு பெண் இறந்து 10 ஆண்டுகள் வரை யாரும் அதைக் கண்டுகொள்ளவில்லை என்பது எவ்வளவு வேதனையானது!

அநேக மக்கள் தனிமையால் துன்பப்படுகிறார்கள். 'ஆராய்ச்சியாளர்கள் தனிமை எனும் கொள்ளைநோயை எதிர்கொள்கிறார்கள்' என்ற தலைப்பில் 2016 ஆம் ஆண்டில், தி நியூயார்க் டைம்ஸ் ஒரு கட்டுரை வெளியிட்டது. இந்தப் பிரச்சனை உண்மையிலேயே இருக்கிறது.

நாம் தனிமையாக இருப்பதற்குப் படைக்கப்படவில்லை. ஏதேன் முதற்கொண்டு, மற்றவர்களோடு சேர்ந்து வாழ்கிறவர்களாகவே நாம் இருக்கிறோம். ஆனால், பாவம் நுழைந்ததிலிருந்து, எதுவும் சரியாக இல்லை. வாழ்க்கையின் வெவ்வேறு காலக்கட்டத்தில் நாம் அனுபவிக்கிற தோழமை அல்லது தனிமையைக் குறித்து இந்த வாரத்தில் படிக்கப் போகிறோம்.

*2019, ஏப்ரல் 27 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# தோழமை

**கேள்வி: பிரசங்கி 4: 9-12 சொல்கிற அடிப்படைக் கருத்து என்ன? என்ன நியதிபற்றி இவ்வசனம் பேசுகிறது?**

வெகு சிலர் மாத்திரமே தனிமையாக வாழமுடியும். ஒருவர் தனிமைவிரும்பியாகஇருந்தாலும், ஒருகாலக்கட்டத்தில்தோழமையை எதிர்பார்க்க வேண்டிய சூழ்நிலை வருகிறது. நாம் பிறருடன் சேர்ந்து வாழவே படைக்கப்பட்டிருக்கிறோம். பிரச்சனையான நேரத்தில் ஆறுதலும் ஆதரவும் தரக்கூடிய குடும்பத்தாரைப் பெற்றிருப்பது எவ்வளவு பெரிய பாக்கியம்!

நம் சபையிலும், வேலை நடக்கும் இடத்திலும், நம் வீட்டருகேயும் பலர் தனிமையில் வாழ்கிறார்கள். பிரச்சனை நேரத்தில்தான் என்றல்ல, சும்மா பேசுவதற்குக்கூட ஆள் இல்லை. ‘‘வேலைநாட்களில் நான் பலரோடு வேலைசெய்கிறேன். ஓய்வுநாளில் சபையோடு இருப்பேன். ஞாயிற்றுக்கிழமை என்னோடு யாரும் இருப்பதில்லை. அந்த நாள் எனக்கு வேதனையான நாள்’’ என்று ஒருவர் கூறுகிறார்.

**கேள்வி: தனிமையின் வேதனையில் நமக்கு இந்த வசனங்கள் எவ்வாறு உதவக்கூடும்? யோவா 16:32,33; பிலி 4: 11-13.**

தேவனோடு நாம் பேசி அவரோடு ஐக்கியமாக இருக்கமுடியும் என்பது உண்மை. தேவனோடு நாம் நெருக்கமாக இருக்க முடிவதால் நமக்கு ஆறுதல் கிடைத்தாலும், அது போதும் என்று சொல்லிவிட முடியாது. ஏதேனில் தேவனோடு ஆதாம் நெருக்கமாக இருந்தபோதிலும், மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று தேவன் சொன்னார். ஆதி 2:18. பாவமில்லாத உலகத்திலேயே ஆதாமுக்கு ஒரு மனித துணை அவசியமாக இருந்தது என்றால், இன்று அது எவ்வளவு அதிக அவசியம்!

ஒரு மனிதனைச் சுற்றி நிறைய மக்கள் இருப்பதினால், அவர் தனிமையில் இல்லை என்று சொல்லிவிட முடியாது. பெரிய நகரங்களில் அநேக நபர்களோடு பழகுகிறவர்கள்கூட தனிமையின் வேதனையை அனுபவிக்கிறார்கள். நம்முடைய உடல்கள் நெருக்கமாக இருந்தாலும், மனதில் அன்னியர்களாக இருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.

யாரெல்லாம் அந்நியப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு, தனிமையில் வாடுகிறார்கள் என்பதைக் கண்டுபிடிப்பது எளிது அல்ல. குறைந்தபட்சம் பேசவாவது ஒரு ஆள் வேண்டும். அப்படிப்பட்டவர்களை தேடிச்சென்று உதவிசெய்ய நீங்கள் என்ன செய்யலாம்?

# திருமணமாகாத வாழ்க்கை

"நான் ஊழியத்திற்கு அழைக்கப்பட்டபோது, எவ்வித தயக்கமும் இல்லாமல், இரண்டுமுறை அழைப்பை ஏற்றுக்கொண்டேன்" என்று திருமணமாகாத ஒரு இளம்பெண் சொன்னார். திருமணமான ஒருவர் அவ்வாறு செய்யமுடியாது என்பது அவர் கருத்து. திருமணமாகி, குடும்பம் வந்துவிட்டால், தன் வாழ்க்கைத் துணையிடமும் பிள்ளைகளிடமும் கேட்டு, தீர்மானம் செய்ய யோசனை வரும்.

**கேள்வி: திருமணம்செய்யாமல் இருப்பதற்கு பவுல் சொல்கிற நல்ல காரணங்கள் என்ன? 1 கொரி 7: 25-34.**

திருமணம் செய்யவேண்டும் என்பது தேவ சித்தம் என்று பெரும்பாலானோர் நினைக்கிறார்கள். 'மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று அவர் சொல்லவில்லையா?' என்று சொல்கிறார்கள். நமக்கு பெரிய முன்மாதிரியான இயேசு கிறிஸ்து திருமணம் செய்துகொள்ளவில்லை அல்லவா?

திருமணம் செய்யவேண்டாமென எரேமியாவிடம் தேவன் சொன்னார். எரே 16:1-3. அது ஒரு வரலாற்று சூழ்நிலையில் தேவன் சொன்ன தீர்மானம். அவர் தனியாக இருந்தாலும் பெரிய தீர்க்கதரிசியாக இருந்தார்.

எசேக்கியேலின் மனைவி திடீரென இறந்துவிட்டார். தமது மக்களின் நிலைமை பற்றி அடையாளமாகச் சொல்வதற்காக எசேக்கியேலின் வாழ்வில் இருந்த முக்கியமான நபராகிய அவர் மனைவியை தேவன் எடுத்துக்கொண்டார். எசேக்கியேல் 24:15-18. எசேக்கியல் அழுவதற்குக்கூட தேவன் அனுமதி தரவில்லை; ஆனால், ஊழியத்தை தொடர்ந்து செய்யவேண்டி இருந்தது. தன் கணவனை விட்டுவிட்டு, வேறு ஆண்களைத் தேடக்கூடிய ஒரு பெண்ணைத் திருமணம் செய்யும்படியாக ஓசியாவிடம் ஆண்டவர் சொன்னார். ஓசியாவின் வாழ்வில் மணமுறிவு ஏற்பட்டது; ஆனாலும், தொடர்ந்து ஊழியம் செய்யும்படி ஆண்டவர் சொன்னார். ஓசியா 1-3. இஸ்ரவேலர்மேல் தேவன் வைத்திருந்த ஒருபக்க அன்பை வெளிப்படுத்துவதற்கு இதை அடையாளமாக வைத்தார். ஆனாலும், ஓசியாவின் வாழ்க்கையில் இது வேதனையாகத்தான் இருந்திருக்கும்.

இந்த உதாரணங்கள் ஒவ்வொன்றிலும், திருமண நிலைமை ஒரு பிரச்சினையாக இல்லை. தனிமனிதனின் உத்தமத்தையும் கீழ்ப்படிதலையுமே தேவன் முக்கியப்படுத்தினார். நம்முடைய திருமண நிலைமையை வைத்து நம்முடைய வாழ்க்கை தீர்மானிக்கப்படவேண்டிய அவசியமில்லை. திருமணம்செய்யாவிட்டால், வாழ்க்கை பூரணம் அடையாது என்று பலர் சொல்வார்கள். இந்த உலகத்தின் மக்களைப்போல இராதீர்கள் என்பதுதான் பவுலுடைய பதிலாக இருக்கும். உங்கள் சரீரங்களை தேவனுக்கேற்ற பலியாக ஒப்புக்கொடுங்கள். ரோமர் 12:1,2.

திருமணமாகாதவர்களுக்கு நீங்கள் எந்த விதத்தில் உதவிசெய்ய முடியும்?

# திருமணம் முறியும்போது

பாவத்தால் சரீரப்பிரகாரமான துன்பங்கள் நமக்கு வருகின்றன. அதைவிட மோசமான விளைவுகள் நம் குடும்பங்களில் ஏற்படுகின்றன. ஒவ்வொரு குடும்பமும் ஏதோ சில அம்சங்களில் செயலற்ற குடும்ப மாக இருக்கின்றது.

ஒரு குடும்பத்தில் மரணம் கொடியது. அதற்கடுத்த கொடியது மணமுறிவு. திருமணத்தை முறித்துக்கொள்கிறவர்கள் வேதனையான உணர்வுகளை அனுபவிக்கிறார்கள். அவற்றுள் முக்கியமானது வருத் தம். சிலருக்கு இந்த வேதனை பல மாதங்கள் நீடிக்கலாம்; சிலருக்கு பல வருடங்கள்கூட நீடிக்கலாம். இனி என்னாகுமோ என்கிற பயம், பொருளாதாரக் கவலைகள் போன்றவை ஏற்படலாம். மன அழுத்தம், கோபம், தனிமை போன்றவையும் வாட்டலாம்.

**கேள்வி: விவாகரத்துபற்றி என்ன பரந்த நியதிகளைப பின்வரும் வசனங்கள் சொல்லு கின்றன? மல் 2:16; மத் 5:31,32; 19:8; 1கொரி 7:11-13.**

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

மனுக்குலம் மீட்கப்படுவதற்கு திருச்சபை உதவிசெய்ய வேண் டும். அதனால், சபை விசுவாசிகள் அனைவரும் முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவ அனுபவத்திற்குள் வளர்வதற்கு உதவிசெய்ய வேண்டும். வாழ்க்கையை அதிகம் மாற்றக்கூடிய திருமணம், விவாகரத்து போன்ற சமயங்களில் இந்த உதவி மிகவும் அவசியம். ஒரு குடும்பம் உடையப் போகிற அபாயம் ஏற்பட்டால், அதைத் தடுப்பதற்கு தம்பதியர் இரு வரும் முயற்சிசெய்ய வேண்டும்; சபை விசுவாசிகளும் உதவி செய்ய வேண்டும். உறவுகளைச் சரிசெய்வதற்கான தெய்வீக நியதிகளைப் பயன்படுத்தி, இருவரையும் ஒப்புரவாக்கவேண்டும். ஓசியா 3:1- 3: 1கொரிந்தியர் 7:10,11; 13:4-7, கலாத்தியர் 6:1.

வலுவான கிறிஸ்தவ குடும்பம் ஏற்படுவதற்கு சபை அமைப்புகள் பின்வருமாறு கூட்டம் நடத்தி உதவிசெய்யலாம். 1. திருமணம் செய்யப் போகிற மணமக்களுக்கு நடத்துகிற ஆலோசனை நிகழ்ச்சி 2. திருமண மான தம்பதியரைக் குடும்பமாக அழைத்து நடத்துகிற ஆலோசனைக் கூட்டம் 3. பிரிந்த, விவாகரத்து செய்த தம்பதியருக்கு நடத்துகிற ஆலோசனைக் கூட்டம்.

விவாகரத்து செய்யப்போகிற மக்களைக் குறைகூறாமல், அவர்களுக்கு நடைமுறை உதவி எவ்வாறு செய்யலாம்?

# இறப்பும் தனிமையும்

மரணத்தைப் பொருத்தமட்டில் மனிதருக்கும் கோழிகளுக்கும் என்ன வித்தியாசம் என்று ஒருவர் ஒருமுறை கேள்விகேட்டார். மரணம் தனக்கு நேரிடும் என்பது மனிதனுக்கு தெரியும்; ஆனால், கோழிக்குத் தெரியாது. மரணத்தை நாம் சந்திக்கப் போகிறோம் என்கிற அறிவு நம்முடைய வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

மரணம் என்கிற நம் மாபெரும் எதிரி வரும்போது, திருமணம் உட்பட எல்லா உறவுகளுமே முடிந்துவிடுகின்றன. நம் உறவு எவ்வளவு நெருக்கமானதாக இருந்தாலும், நம் அன்பு எவ்வளவு பெரியதாக இருந்தாலும், நாம் ஒருவரோடு ஒருவர் எவ்வளவு அதிக நேரம் செலவிட்டிருந்தாலும், மரணம் வரும்போது நம் உறவுகள் எல்லாம் முடிந்துவிடும். இயேசு கிறிஸ்து மீண்டும் வரும்வரை இதுதான் நம் நிலைமை.

ஆதாம்- ஏவாள் இருவரில் முதலில் இறந்தவர் யார் என்று வேதாகமம் சொல்லவில்லை. முதலில் இறந்தவர் யாராக இருந்தாலும், அடுத்தவருக்கு மிகுந்த வேதனையாக இருந்திருக்கும். மரத்தின் ஓர் இலை உதிர்ந்தபோதே அவர்கள் வேதனைப்பட்டார்கள் என்பதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மை என்றால், தன்னுடைய துணை இறந்தபோது, எவ்வளவு வேதனைபட்டிருப்பார்கள்.

இப்போது மரணம் நமக்குப் பழகிவிட்டது. மரணம் வந்திருக்க வேண்டிய அவசியமில்லை. அதனால், இன்றும்கூட மரணம் ஒரு பிரச்சனையாகத்தான் இருக்கிறது. அதை ஒத்துக்கொள்ள நம்மால் முடிவதில்லை.

**கேள்வி: மரணத்தைப் பற்றி பின்வரும் வசனங்கள் என்ன சொல்கின்றன? மரணத்தோடு மனிதர்கள் எவ்வாறு போராடுகிறார்கள்? ஏசா 57:1; வெளி 21: 4; 1தெச 4:17, 18; மத் 5: 4; 2சாமு 18:33; ஆதி 37:34.**

நாம் மரித்து விடுவோம் என்பது மாத்திரமல்ல, நாம் நேசிக்கிறவர்களும் மரித்துவிடுவார்கள் என்பதுதான் யதார்த்தம். எனவே, ஒரு காலம் வரும்; நாம் மிகவும் நேசிக்கிறவர்களை மரணம் நம்மைவிட்டுப் பிரித்து விடும். அப்போது தனிமை நம்மை வாட்டும்; நமக்கு மிகுந்த வேதனை ஏற்படும். அப்போது தேவனுடைய வாக்குறுதிகளை நாம் நினைத்துப் பார்க்கவேண்டும். பாவ உலகத்தில் நமக்கு வேறு என்ன ஆறுதல் இருக்கிறது?

தன்னை நேசிக்கிற ஒருவரை இழந்ததால் தனிமையில் வாடும் மக்களுக்கு நீங்கள் சபையாக என்ன உதவிசெய்ய முடியும்?

**வியாழன்** ஏப்ரல் 25

## ஆவிக்குரிய தனியர்கள்

நடாலிக்குத் திருமணமாகி ஏழு ஆண்டுகள் ஆகின்றன. ஒரு நண்பரின் அழைப்புக்கு இணங்கி, அங்கிருந்த செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையில் நடந்த ஒரு சுவிசேஷக் கூட்டத்திற்குச் சென்றாள். அங்கே புதிய பிறப்பின் அனுபவத்தைப் பெற்ற நடாலி, இயேசுவுக்கு தன் உள்ளத்தை ஒப்புக்கொடுத்தாள். அவளுடைய கணவரும் பெற்றோரும் கணவன் வீட்டாரும் நண்பர்களும் எதிர்த்தபோதிலும், செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையில் சேர்ந்தாள். தனது வாழ்க்கை முறையையும் மாற்றிக்கொண்டாள்.

அதன்பிறகு அவள் அதிகமான எதிர்ப்பைச் சந்தித்தாள்; அவளுடைய கணவனால் அதைத் தாங்கமுடியவில்லை. தன்னுடைய நிலையில் இருந்து அவன் வாதிட்டான்: “நான் திருமணம் செய்தபோது இந்த ஒப்பந்தம் போடவில்லையே. நீ முற்றிலும் புதிய நபராகிவிட்டாய், எனக்கு பழைய நபர்தான் வேண்டும்.”

விசுவாசத்தில் நிலைத்திருப்பதற்கு பல வருடங்களாக அவள் போராடி வருகிறாள். திருமணம் ஆகியிருந்தாலும், ஆவிக்குரிய இந்நிலையில் தனியளாக இருக்கிறாள். இதைத்தான் ஆவிக்குரிய தனிமை என்கிறோம்.

**கேள்வி: ஆவிக்குரிய தனிமையில் இருப்பவர்களுக்கு பின்வரும் வசனங்கள் என்ன ஆறுதலைத் தருகின்றன? ஏசா 54:5; ஓசியா 2:19, 20; சங் 72:12.**

---

உலக முழுவதிலும் நம் சபையில் நடாலிகள் இருக்கிறார்கள். ஆண்களோ பெண்களோ, இவர்கள் ஆலயத்திற்கு வரும் போது தனியாகத்தான் வருவார்கள். சில சமயங்களில் பிள்ளைகளோடு வருவார்கள். திருமணம் செய்தபோது, விசுவாசத்தைச் சேர்ந்தவர்களைத் திருமணம் செய்திருக்கலாம். அல்லது, திருமணமான பிறகு ஒருவர் மாத்திரம் சத்தியத்தை ஏற்றிருக்கலாம். அல்லது, ஏதாவது காரணத்தால் ஒருவர் சபையை விட்டு விலகி இருக்கலாம். ஆலயத்துக்கு வரும் போதும், ஊழியத்துக்கு செல்லும்போதும், வேறு சபை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் போதும் தனியாகவே வருவார்கள். அவருடைய வாழ்க்கைதுணை தடைசெய்வதால் சபையின் ஊழியங்ளுக்குப் பணம் கொடுக்க அவரால் முடியாது. திருமணம் ஆகி இருந்தாலும், ஆவிக்குரிய வாழ்க்கையில் தனியராக இருப்பார்.

ஒருவேளை நாம் எல்லோருமே, சபையில் இப்படிப்பட்டவர்களைச் சந்தித்திருப்போம். இவர்களுக்கு நம்முடைய அன்பும் ஆதரவும் தேவை.

நம் மத்தியில் இருக்கிற ஆவிக்குரிய தனியர்களுக்கு சபைக் குடும்பமாக நாம் எவ்விதத்தில் உதவி செய்யலாம்?

## வெள்ளி ஏப்ரல் 26

## மேலும் படிக்க:

"சுறுசுறுப்பான உழைப்புக்கு மத்தியிலும் தேவனோடு ஏனோக்கு தொடர்பு வைத்திருந்தார். எவ்வளவுக்கு வேலை அதிகமாக இருந்ததோ, அவ்வளவு அதிகமாக தேவனோடு பேசினார். மக்களோடு இருந்து செயலாலும் சொல்லாலும் அவர்களுக்கு நன்மைகளை செய்துவிட்டு, குறிப்பிட்ட நேரங்களில் அவர்களை விட்டு விலகி, தனியாகச் சென்றுவிடுவார். ஆவிக்குரிய தாகத்தோடு, தேவன் மாத்திரமே தரக்கூடிய தெய்வீக அறிவுக்குக் காத்திருப்பார். இயேசுவின் முகம் பிரகாசித்ததுபோல, அவருடைய முகம் பிரகாசிக்கும். தேவனோடு நேரம் செலவிட்டு அவர் வரும்போது, அவருடைய முகத்தில் பரலோக ஒளியைக் கண்டார்கள்." – *GW, p 52.* ஏனோக்கின் வரலாறு ஊக்கமளிக்கிறது. தனிமையாக தேவனோடு இருப்பதால் கிடைக்கிற நன்மையைப்பற்றி பலவிதமாக இது பேசுகிறது. ஆனால், பலருக்கு அவர்கள் தேடாத தனிமை வாய்க்கிறது. அவர்கள் தனிமையாக இருக்க விரும்புவது இல்லை. தனிமை வரும்போது, தேவனோடு ஐக்கியமாக இருக்க நாம் தீர்மானிக்கலாம். அவர் எப்போ தும் அதற்கு ஆயத்தமாக இருக்கிறார். ஆனால் சிலசமயங்களில் மனிதர்களுடைய தோழமையும் நட்பையும் பெறத்தான் வெறியாக இருக்கிறோம். ஒவ்வொரு நாளும் ஓய்வுநாளில் நம் அருகேதான் உட்கார்ந்திருப்பார்கள்; ஆனால் பயங்கர தனிமையில் வாடுகிறவர்களாக இருப்பார்கள்; அவர்களுடைய தனிமையை ஒரு சபையாக நாம் போக்கவேண்டியது எவ்வளவு முக்கியமானது? அதுபோன்ற தனிமையை நீங்கள் அனுபவித்து வருகிறீர்கள் என்றால், சபையில் நம்பத்தகுந்த ஒருவரோடு பழகுங்கள்; அவர்களிடம் பிரச்சனைகளைப் பரிமாறிக் கொள்ளுங்கள். அநேகர் தங்கள் மனதில் என்ன நினைக்கிறார்கள் என்பது மற்றவர்களுக்குத் தெரியாது.

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *உங்கள் மத்தியில் உள்ள தனியர்களின் தேவைகளைச் சந்திக்க உங்கள் சபை எவ்வாறு முயற்சி எடுக்கலாம்?*

2 *'என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை; ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்.' பிலி 4:11. இங்கே பவுல் சொல்லுகிற வார்த்தைகளின் பின்னணியைப் படியுங்கள். இதை நாம் நமக்கு எவ்வாறு பயன்படுத்தலாம்? அதே சமயத்தில், துன்பத்தில் இருக்கிற ஒருவரிடம் இந்த வசனத்தை மேற்கோள்காட்ட நாம் ஏன் கவனமாக இருக்கவேண்டும்?*

3 *கொடுமையான தனிமையை அனுபவித்த அனுபவம் இருந்தால் அதை வகுப்பில் பரிமாறிக் கொள்ளுங்கள். உங்களுக்கு உதவி எப்படி கிடைத்தது? உங்களை வேதனைப்படுத்தியது எது? மற்றவர்களுக்கு உதவியாக இருக்க நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?*

# அப்பாவுக்கு ஞானஸ்நானம் கொடுத்த டிவிஷன் தலைவர்

**ஆண்ட்ரூ மக்செஸ்னீ, அட்வென்ட்டிஸ்ட் மிஷன்**

செவந்த்–டே அட்வென்ட்டிஸ்ட் சபையின் தென் ஆசியா–பசிஃபிக் டிவிஷனின் தலைவராக இருக்கும் சாமுவேல் ஷா, தன் அப்பாவுடன் ஒட்டுறவின்றி வளர்ந்தவர்.

"என் அப்பா என்னைக் கட்டிப்பிடித்ததே இல்லை. அப்பா இல்லாதவனாகத்தான் நான் வளர்ந்தேன்" என்று சொல்கிறார்.

தாத்தா பாட்டிதான் ஷாவை வளர்த்தார்கள். அட்வென்டிஸ்ட் பள்ளியில் படித்தார். பிறகு, மியான்மியாரில் உள்ள மியான்மர் யூனியன் அட்வென்டிஸ்ட் வேதாகமப் பள்ளியில் போதகப்படிப்பை முடித்தார்.

அந்த தென்கிழக்கு ஆசிய நாட்டில் ஊழியம் செய்வது சவாலானது. அங்கு 4 சத விகிதத்தினர்தான் கிறிஸ்தவர்கள். 90 சதகவிகிதத்தினர் புத்த மதத்தினர்.

"கிறிஸ்தவரல்லாத உங்கள் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் சத்தியத்தைச் சொல்லுங்கள்" என்று ஒரு போதகராக அநேகரிடம் ஷா சொல்லியிருக்கிறார். ஆனால் அவர் தன் அப்பாவைத் தேடிச் சென்று சத்தியம் சொன்னது கிடையாது.

ஷாவுக்குத் திருமணமானது. இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். தாய்லாந்து, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் ஊழியம் செய்திருக்கிறார்.

தென் ஆசியா–பசிஃபிக் டிவிஷனில் நிர்வாகச் செயலாளராகப் பணியாற்றிய போது, ஜெப வாரம் ஒன்றில் கலந்துகொண்டார். அப்போதுதான் அப்பாவை யோசித்தார்.

அப்பாவைச் சந்திப்பதற்கு ஆர்வம் சற்றும் இல்லை. பெலன் தரும்படி தேவனிடம் ஜெபித்தார். தொடர்ந்து ஜெபித்தார். அவர் எதிர்பாராதது நிகழ்ந்தது.

"76 வயதான என் அப்பாவுக்கு நானே ஞானஸ்நானம் கொடுக்கும் சிலாக்கியம் கிடைத்தது" என்று ஷா சொல்கிறார்.

"மகனே, பாடல்புத்தகத்தோடும் வேதாகமத்தோடும் ஆலயம் செல்ல விரும்புகிறேன். எனக்கு ஒரு பாடல்புத்தகமும் வேதாகமும் வாங்கிக்கொடு" என்று தன் அப்பா சொன்னதாக ஷா சொல்கிறார்.



ஞானஸ்நானம் பெற்றதும், அப்பாவும் மகனும் முதன் முறையாகக் கட்டிப்பிடித்தார்கள். ஆனந்தத்தில் உறைந்துபோனார் ஷா.

**'தேவனுடைய மாற்றும் வல்லமையைப் பெறாவிட்டால், நாம் வெறும் மனிதர்கள்தாம். அவர் வல்லமையைப் பெற்றுவிட்டால், உலகத்தில் மாற்றம் ஏற்படுத்தலாம்.'**